# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முறையீட்டு மனு எண்22 /2017/பே
ஆணை எண். 14/2018/நாள்–23 –01–2018

திருமதி என்.விஜயகுமாரி,
க/பெ திரு கே. நாகராஜன்,
76–பி. ராமசாமி சந்து,
திசையன்விளை அஞ்சல்,
திருநெல்வேலி மாவட்டம். –– முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திசையான்விளை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். –– எதிர் மனுதாரர்.

ஆணை.

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை, 76–பி. ராமசாமி சந்து என்ற முகவரியினை சேர்ந்த திருமதி என். விஜயகுமாரி என்பவரின் 04.02.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.02.2017 அன்று பெறப்பட்டு 022/2017 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, நேரடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் முறையாக பரிசீலிக்கப்பட்டும் கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திருமதி என். விஜயகுமாரி என்பவர் தனது முறையீட்டு மனுவில், தான் திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சியில் ஒப்பந்தக்காரராக உள்ளதாகவும், மேற்படி பேரூராட்சியில் 2014–15 ஆம் ஆண்டில் தன்னால் செய்து முடிக்கப்பட்ட பேரூராட்சி பணிகளுக்கான டேவணித் தொகையினை, மேற்படி பணிகளுக்கான பணிசரிபார்ப்பு முடிவுற்றும் டேவணித் தொகை திரும்ப வழங்கப்படாமல் பேரூராட்சியால் காலம் கடத்தப்படுவதாக புகார் தெரிவித்துள்ளார். திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித எண் 182/2016 நாள் 29.11.2016ல் 2016–17ம் ஆண்டு

டேவணி பதிவேடு சரிபார்த்து வரப்படுகிறது எனவும், சரிபார்ப்பு பணி முடிந்த பின்னர் டேவணித் தொகை வழங்கப்படும் என தெரிவித்ததாகவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். ஆனால் 40 நாட்கள் கடந்த பின்னரும் மேற்படி டேவணித் தொகை வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.. மேலும் 2012-13 மற்றும் 2013-14 ஆம் ஆண்டுக்குரிய டேவணித் தொகைகள் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவரிடம் முறையீடு செய்ததின் மூலம் பெறப்பட்டதினால் 2014-15 ஆம் ஆண்டுக்குரிய டேவணித் தொகையும் அவ்வாறே பெற்றுக் கொள்ள வேண்டி செயல் அலுவலரை அணுகியபோதும் காலம் தாழ்த்தி வருவதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 08.02.2017 மற்றும் 11.09.2017 ஆகிய தேதிகளில் ஆணையிடப்பட்டது.

திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் 42/2017/நாள் 28.09.2017ன்படி தனது விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 11.11.2017ம் நாளிட்ட அழைப்பாணையின்படி திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் மேற்படி பொருள் குறித்தான நேரடி விளக்கத்தினை சமர்ப்பிக்க 09.01.2018 அன்று நேரில் ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது.

இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் திருமதி என் விஜயகுமாரி தனது 16.12.2017ம் நாளிட்ட கடிதத்தில் தனக்கு திசையன்விளை பேரூராட்சியில் இருந்து கிடைக்கப்பெறவேண்டிய டேவணித் தொகை சம்பந்தமாக மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர் தான் செய்த பணிகள் சிலவற்றில் தணிக்கைத் தடை உள்ளதாக தெரிவித்துள்ளதாகவும், மேற்படி தணிக்கைத் தடைகளை சரி செய்து விட்டு தனக்குரிய டேவணித் தொகையினை திரும்ப பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் 09.01.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நேரில் ஆஜராகி தனது விளக்கத்தினையும் பதிவு செய்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது 16.12.2017ம் நாளிட்ட கடிதத்தில் திசையன்விளை பேரூராட்சியில் அவரால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான டேவணித் தொகைகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக கோரியபோது மேற்படி பணிகளில் சிலவற்றிற்கு உள்ளாட்சி நிதிக் கணக்குத் தணிக்கைத் துறையினரால் தடைகள் எழுப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதை ஏற்று மேற்படி தணிக்கைத் தடைகள் நீக்கப்பட்டபின்னர் தனக்கான டேவணித் தொகையினை திரும்ப பெற்றுக் கொள்வதாக சம்மதம் தெரிவித்துள்ளார். மேலும் செயல் அலுவலர், 09.01.2018 அன்று நடைபெற்ற விசாரணையின்போது தணிக்கைத் தடைகள் குறித்தான கூட்டமர்வில் எடுக்கப்படும் இறுதி முடிவின் அடிப்படையில் மனுதாரருக்கு டேவணித் தொகை திரும்ப வழங்கப்படவேண்டிய நிலைப்பாடு இருப்பின் தாமதமின்றி வழங்கிடவும், மனுதாரர் கூடுதலாக செலுத்தவேண்டிய நிலையிருப்பின் உரிய விதிகளின்படி

வசூல் செய்யவும் நடவடிக்கைககள் எடுக்கப்படும் எனவும் வாக்கு மூலத்தில் உறுதி அளித்துள்ளார்.

எனவே மனுதாரரது சம்மதக் கடிதம் மற்றும் செயல் அலுவலரது வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு நன்கு பரிசீலித்ததில் தொடர் நடவடிக்கை கைவிடப்படலாமெனக் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 -ஆம் நாள் கையொப்பமிட்டுட அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநா

1.திருமதி என்.விஜயகுமாரி,
க/பெ திரு கே. நாகரஜன்,
76–பி. ராமசாமி சந்து,
திசையன்விளை அஞ்சல்,
திருநெல்வேலி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
திசையான்விளை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.